## April 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வீட்டில் பாதி எரிந்த மூட்டைகளில் கட்டுகட்டாகப் பணம் கண்டறியப்பட்ட சர்ச்சையில் சிக்கிய அலாகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா, தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

(i) தனது ராஜிநாமா கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அவர் வியாழக்கிழமை (ஏப்.9) அனுப்பியதாக மத்திய மத்திய அரசு வட்டாரங்கள் வெள்ளிக்கிழமை (ஏப்.10) தெரிவித்தன.

(ii) தில்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக யஷ்வந்த் வர்மா பதவி வகித்தபோது, அவருடைய அரசு இல்லத்தில் கடந்த ஆண்டு மார்ச் 14- ஆம் தேதி தீ விபத்து ஏற்பட்டது. அப்போது, அங்குள்ள அறையில் பாதி எரிந்த மூட்டைகளில் கட்டுக்கட்டாகப் பணம் இருந்தது கண்டறியப்பட்டது. பகுதி எரிந்த நிலையில் இருந்த அந்தப் பணம் பின்னர் மாயமானது.

(iii) இந்த சர்ச்சை தொடர்பாக நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவியிலிருந்து நீக்க மக்களவை உறுப்பினர்கள் 146 பேர் மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 62 உறுப்பினர்கள் என மொத்தம் 208 எம். பி.க்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் நோட்டீஸ் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களவையில் நீதிபதியின் பதவிநீக்க தீர்மான நோட்டீஸ் ஏற்கப்பட்டது. மக்களவையில் இந்த விவகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால், மாநிலங்களவையில் அந்தத் தீர்மானத்தை அவைத் தலைவர் நிராகரித்தார்.

(iv) மக்களவையில் தீர்மானம் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து, அதுகுறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க உச்சநீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா, கர்நாடக உயர்நீ திமன்ற மூத்த வழக்குரைஞர் பி.வி.ஆச்சார்யா ஆகியோர் அடங்கிய மூவர் குழுவை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அமைத்தார்.

(v) மக்களவைத் தலைவர் விசாரணைக் குழு அமைத்ததற்கு எதிராக நீதிபதி யஷ்வந்த் வர்மா தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து அண்மையில் உத்தரவிட்டது.

(vi) இந்தச் சூழலில் உயர்நீதிமன்ற நீதிபதி பதவியை யஷ்வந்த் வர்மா ராஜிநாமா செய்துள்ளார்.

2. வெனிசுலாவில் முடங்கிக் கிடக்கும் சுரங்கத் தொழிலை மேம்படுத்தவும், அந்நிய முதலீட்டாளர்களை ஈர்க்கவும் வகை செய்யும் புதிய சுரங்க ஒழுங்குமுறை சட்ட மசோதாவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

(i) முன்னாள் அதிபர் நிக்கோலஸ் மடூரோவின் கைதுக்குப் பிறகு அமெரிக்காவுடன் இணக்கமாகவுள்ள இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிகஸ் தலைமையிலான அரசு, பல்லாண்டுகளாக குற்றக்கும்பல்களின் பிடியிலும், முறையற்ற நிர்வாகத்திலும் இருந்த சுரங்கத் துறையைச் சீரமைக்கும் நோக்கில் இச்சட்ட

மசோதாவைக் கொண்டு வந்துள்ளது.

(ii) மேலும், நாட்டின் உயர்பதவிகளில் இருப்பவர்கள் சுரங்க உரிமங்களை வைத்திருக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட மசோதா அமலுக்கு வரும் முன், அதன் அரசமைப்புத் தன்மையை உறுதி செய்ய அந்நாட்டு உச்சநீதிமன்றத்தின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3. தைவான் சுந்திரத்தை சீனா ஒருபோதும் ஏற்காது; அமைதியைச் சீர்குலைக்கும் முக்கியக் காரணியே இத்தனிநாடு கோரிக்கைதான்' என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

(i) சீனா-தைவான் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தவும், பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிக்கவும் தைவானின் முக்கிய எதிர்க்கட்சியான கோமிங் டாங் கட்சியின் தலைவர் செங் லி வுன் சீனாவுக்கு 'அமைதிப் பயணம்' மேற்கொண்டுள்ளார்.

(ii) இந்நிலையில், பெய்ஜிங்கில் செங் லி- வுன் உடனான சந்திப்பில் பேசிய ஷி ஜின்பிங், 'தைவான் நீரிணையின் இருபுறமும் உள்ளவர்கள் - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சீனர்கள். அமைதி, வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பையே மக்கள் விரும்புகின்றனர்.'

(iii) ஆனால், தைவான் பிரிவினைவாதம் அந்த அமைதிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. தாய்நாட்டுடன் மறுஇணைப்பு மற்றும் தேச புத்துயிருக்காக தைவானின் இரு கட்சிகளும் கைகோத்துச் செயல் படவேண்டும்' என்று அழைப்பு விடுத்தார். சீனாவின் இந்த நிலைப்பாட்டைக் கடுமையாக விமர்சித்துள்ள தைவான் ஆளும்தரப்பு, 'தைவானின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை அந்நாட்டு மக்களுக்கே உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசுடன் சீனா பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமே தவிர, இத்தகைய அழுத்தங்களைக் கொடுக்கக்கூடாது' என்று வலியுறுத்தியது.

4. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, ஏப். 1- ஆம் தேதி தொடங்கிய நடப்பு 2026-27 நிதியாண்டில் 6.9 சத வீதமாக இருக்கும் என்று ஆசிய வளர்ச்சி வங்கி (ஏடிபி) தெரிவித்துள்ளது.

(i) முன்னதாக இது 6.5 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்த நிலையில், உள்நாட்டுத் தேவை அதிகரிப்பு, அமெரிக்க இறக்குமதி வரி குறைப்பு மற்றும் தளர்த்தப்பட்ட நிதிச் சூழல் போன்ற காரணிகளால் இந்த வளர்ச்சி அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 2027-28 நிதியாண்டில் இந்த வளர்ச்சி 7.3 சதவீதமாக மேலும் வலுவடையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

(ii) மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் நீண்டகால போர்ச் சூழல், ஆசிய நாடுகளின் பொருளாதாரத்துக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக ஏடிபி எச்சரித்துள்ளது.

(iii) எரிசக்தி விலையேற்றம், வர்த்தகப் போக்குவரத்து பாதிப்பு மற்றும் அந்நிய செலாவணி வரத்து குறைவு போன்றவை இந்தியாவின் பொருளாதாரச்

செயல்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். கச்சா எண்ணெய் விலை உயர்வால் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரிக்க வாய்ப்புகான உள்ளீட்டுச் செலவுகளை உயர்த்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(iv) உணவுப் பொருள்கள் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வால், இந்தியாவில் பணவீக்கம் கடந்த நிதியாண்டின் 2.1 சதவீ தத்திலிருந்து நடப்பு நிதியாண்டில் 4.5 சதவீதமாக அதிகரிக்கக் கூடும். ஆனால், அடுத்தடுத்த ஆண்டுகளில் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை குறையும் சூழலில், பணவீக்கம் 4 சதவீதமாகக் குறைய வாய்ப்புள்ளது.

(v) பணவீக்கம் ரிசர்வ் வங்கியின் இலக்கு வரம்புக்குள் இருப்பதால், நடப்பு நிதியாண்டில் வட்டி விகிதங்களில் பெரிய மாற்றங்கள் இருக்காது என்றும், மத்திய அரசு தனது நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் செலவினக் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வு மற்றும் ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஏற்றுமதி அதிகரிப்பது போன்றவை எதிர்கால வளர்ச்சிக்கு வலுசேர்க்கும்.

(vii) ஏழை எளிய மக்களைப் பாதிப்பிலிருந்து காக்க மானியங்களைச் சீரமைப்பதும், பொது முதலீடுகளுக்கான நிதி இடைவெளியைப் பராமரிப்பதும் இந்தியாவுக்கு முன்னால் உள்ள முக்கியச் சவால்கள் என்று ஏடிபி தலைமைப் பொருளாதார நிபுணர் ஆல்பர்ட் பார்க் தெரிவித்துள்ளார்.

(viii) இருப்பினும், உலக வங்கியின் 6.6 சதவீத கணிப்பை விட ஏடிபியின் இந்த 6.9 சதவீத கணிப்பு சற்று நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

5. அமெரிக்கா- ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் சனிக்கிழமை (ஏப். 11) தாமதமாகத் தொடங்குகிறது.

(i) ஈரான் தரப்பில் முன்வைக்கப்பட்ட சில அதிரடி நிபந்தனைகளால் இப்பேச்சுவார்த்தை திட்டமிடப்பட்ட வெள்ளிக்கிழமை தொடங்குவதில் கடைசி நேரத்தில் இழுபறி நீடித்தது.

(ii) அமெரிக்கா-ஈரான் இடையே கடந்த புதன்கிழமை எட்டப்பட்ட 2 வார தற்காலிக போர்நிறுத்தத்தை, ஒரு நிரந்தர அமைதி ஒப்பந்தமாக மாற்றும் நோக்கில் நடைபெறும் இப்பேச் சுவார்த்தை மீது உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ளது.

(iii) பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதின் முக்கிய அரசு அலுவலகங்கள் மற்றும் தூதரகங்கள் அமைந்துள்ள அதிஉயர் பாதுகாப்பு வளையமான 'ரெட் ஜோன்' பகுதியில் உள்ள செரீனா நட்சத்திர விடுதியில், சனிக்கிழமை காலை முதல் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது.

(iv) அமெரிக்கா சார்பில் அந்நாட்டுத் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான தூதுக் குழுவும், ஈரான் தரப்பில் அந்நாட்டு நாடாளுமன்ற அவைத்

தலைவர் முகமது பாகர் கலிபாஃப், வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி உள்ளிட்டோரும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

6. ஆர்த்தடாக்ஸ் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு, உக்ரைனில் சனிக்கிழமை (ஏப். 11) மாலை தொடங்கி 32 மணி நேர தற்காலிக போர் நிறுத்தத்தை மேற்கொள்வதாக ரஷிய அதிபர் புதின் அறிவித்தார்.

(i) ரஷியாவின் இம்முடிவை ஏற்றுக்கொண்ட உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி, அமைதிக்கான இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி உக்ரைனும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் என்றார்.

(ii) கடந்த ஆண்டும் இதேபோன்ற போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட போதிலும், இரு நாடுகளும் பரஸ்பர விதிமீறல் குற்றச்சாட்டுகளால் சாடிக் கொண்டன. இந்நிலையில், இந்த ஆண்டு ஈஸ்டர் திருநாளை மக்கள் அச்சுறுத்தலின்றி கொண்டாட வேண்டும் என்றும், இந்த தற்காலிக இடைவெளி நிரந்தர அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் ஸெலென்ஸ்கி நம்பிக்கை தெரிவித்தார்.

7. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ வரும் மே மாதம் இந்தியா வர உள்ளதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் தெரிவித்தார்.

(i) இந்தியா-அமெரிக்கா இடையேயான இடைக்கால இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை இரு நாடுகளிடையே தொடர்ந்துவரும் நிலையில், ரூபியோ இந்தியா வருவது குறிப்பிடத்தக்கது.

(ii) மூன்று நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி, அமெரிக்க அதிபரின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவை சந்தித்து இருதரப்பு உறவு, வர்த்தகம், அரிய கனிமங்கள், பாதுகாப்பு, நாற்கர நாடுகள் (க்வாட்) கூட்டமைப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இந்தியா வரும் தகவல் வெளியிடப்பட்டது.

8. மோரீஷஸ் நாட்டின் அதிபர் தரம் பீர் கோகுலை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

(i) மோரீஷஸ் நாட்டில் 9-ஆவது இந்திய பெருங்கடல் பகுதிகளில் உள்ள நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக மோரீஷஸ் நாட்டுக்கு ஜெய்சங்கர் சென்றுள்ளார்.

(ii) அங்குஅவர், மோரீஷஸ்நாட்டு அதிபர் தரம்பீர் கோகுலை சந்தித்துப் பேசினார். அப்போது அவரிடம், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோர் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

(iii) இந்தச் சந்திப்பையடுத்து, மோரீஷஸ் பிரதமர் நவீன் ராம்கூலம் மற்றும் மூத்த அமைச்சர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

(iv) மேலும், மோரீஷஸின் முன்னாள் பிரதமரும், எம்எஸ்எம் கட்சியின்

தலைவருமான பிரவிந்த் குமார் ஜக்நாத்தை ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து, இந்திய பெருங்கடல் பகுதிகளில் உள்ள நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள மோரீஷஸ் நாட்டுக்கு வந்துள்ள நேபாளம், பூடான், செஷல்ஸ் ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களை தனித்தனியே ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

(v) அப்போது அவர்களுடன் இருதரப்பு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக தனது சமூகவலைதள பக்கத்தில் ஜெய்சங்கர் பதிவிட்டுள்ளார். மோரீஷஸ் பயணத்தை சனிக்கிழமை முடித்துக் கொண்டு, அடுத்த கட்டமாக ஐக்கிய அரபு அமீரகத்துக்குச் செல்ல ஜெய்சங்கர் திட்டமிட்டுள்ளார்.

9. இந்தியாவின் வேக ஈனுலை மாதிரி வடிவம் மூலம் படைக்கப்பட்டுள்ள சாதனைக்கு சர்வதேச அணுசக்தி முகமை (ஐஏஇஏ) பாராட்டு தெரிவித்துள்ளது.

(i) சென்னை கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மூலம், வேக ஈனுலையின் மாதிரி வடிவமைக்கப்பட்டு, பாரதிய நாபிகியவித்யுத் நிகம்(பாவினி) நிறுவனம் மூலம் கட்டமைக்கப்பட்டது.

(ii) வழக்கமான வெப்ப அணு உலைகளைப் போலின்றி, இத்தகைய ஈனுலை கட்டமைப்புகளில் யுரேனியம்–புளூட்டோனியம் கலப்பு ஆக்சைடு எரிபொருள் பயன்படுத் தப்படுகிறது. இது, அணு உலையில் பயன்படுத்தப்படும் எரிபொருளைக் காட்டிலும் அதிக எரிபொருளை உற்பத்தி செய்ய உதவுகிறது. தோரியத்தை உருமாற்றம் செய்து யுரேனியம்-233ஆக மாற்றுவதற்கு இந்த ஈனுலை உதவிகரமாக இருக்கும்.

(iii) இந்த 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட வேக ஈனுலையின் மாதிரி வடிவம் கடந்த ஏப்.6 -ஆம் தேதி முதலாவது அணுப் பிளவு செயல்பாட்டு நிலையை எட்டியது. இது அணுமின் உற்பத்தியின் முதல் நிலை. நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை வழங்குவதிலும், உள்நாட்டு அணுமின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதிலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செயல்முறை. அணுமின் சக்தி திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை என்று மத்திய அணுசக்தி ஒழுங்காற்று ஆணையம் அண்மையில் தெரிவித்தது.

(iv) இந்நிலையில், ஐஏஇஏ தலைமை இயக்குநர் ரஃபேல் கிராஸி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளதாவது:

- கல்பாக்கத்தில் வேக ஈனுலையின் மாதிரி வடிவம் மூலம், இந்தியா சிறப்பான முன்னேற்றத்தை எட்டியுள்ளது. இது எரிபொருள் ஸ்திரத்தன்மை, அணுசக்தி பயன்பாட்டுக்கான எதிர்காலத்தை நோக்கிய முக்கிய அடியாகும்.
- இந்திய அணுசக்தி திட்டத்தின் பாதுகாப்பான வளர்ச்சிக்கு சர்வதேச அணுசக்தி முகமை தொடர்ந்து ஆதரவளிக்கும். பிரதமர் மோடிக்கு எனது வாழ்த்துகள் என்று தெரிவித்தார்.

10. மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ், மாநிலங்களவை எம்.பி.யாக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவர் நியமன எம்.பி.யாக பதவி யேற்றுக்கொண்டார்.

(i) மாநிலங்களவை நியமன எம்.பி.யாக இருந்த உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோயின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் நிறைவடைந்தது. அந்த இடத்துக்கு ஹரிவன்ஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ii) 69 வயதாகும் ஹரிவன்ஷ், பிகாரில் இருந்து ஐக்கிய ஜனதாதளம் சார்பில் தொடர்ந்து இருமுறை (2014-2026) மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டவர். அவரது எம்.பி. பதவிக் காலம் ஏப். 9-ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது.

(iii) இந்நிலையில், அவரை மாநிலங்களவை எம்.பி.யாக நியமித்து, குடியரசுத் தலைவர் திரௌபதி உத்தரவு பிறப்பித்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவிக் கையில், 'அரசமைப்புச் சட்டத்தின் 8-ஆவது பிரிவின் 1-ஆவது ஷரத்து 'ஏ' உட்பிரிவு மற்றும் 3- ஆவது ஷரத்து ஆகியவற்றின் கீழ் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாநிலங்களவையில் நியமன எம்.பி. ஒருவர் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலியிடத்துக்கு ஹரிவன்ஷை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நியமித்துள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) இந்த நியமனத்தைத் தொடர்ந்து, மாநிலங்களவை எம்.பி.யாக ஹரிவன்ஷ் மூன்றாவது முறையாகப் பதவியேற்றுக்கொண்டார். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தனது அறையில் ஹரிவன்ஷுக்கு மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

11. மத்திய ஆயுதக் காவல் படைகளின் (சிஏபிஎஃப்) பொது நிர்வாக சட்ட மசோதா 2026-க்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கினார்.

(i) மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்), மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எஃப்), எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ் எஃப்), இந்திய-திபெத் எல்லைக் காவல் படை (ஐடி பிபி) உள்ளிட்ட மத்திய ஆயுதக் காவல் படை அதிகாரிகளின் நியமனம், மாற்றுப் பணி, பதவி உயர்வு மற்றும் இதர பணி நிபந்தனைகளை ஒழுங்குப்படுத்தும் ஒருங்கிணைந்த இந்தச் சட்டத்தை மத்திய அரசு அறிவிக்கை செய்தது.

(ii) சிஏபிஎஃப் அதிகாரிகளின் நியமனம், பணி நிபந்தனைகள் உள்ளிட்டவை அந்தந்த படைகளின் சட்டங்களால் நிர்வகிக்கப்படுவதை மாற்றி, ஒருங்கிணைந்த சட்டத்தின்கீழ் கொண்டுவரும் சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறை வேற்றப்பட்டது.

(iii) இந்தச் சட்டத்தின்படி, மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஐ.ஜி. நிலையில் 50 சதவீத பணியிடங்கள், கூடுதல் தலைமை இயக்குநர் (ஏடிஜி) அளவில் 67 சதவீத பணியிடங்கள் மட்டுமன்றி சிறப்பு தலைமை இயக்குநர்-தலைமை இயக்குநர் பதவிகளில் ஐபிஎஸ் அதிகாரிகளை மாற்றுப் பணி அடிப்படையில் நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) மத்திய ஆயுதக் காவல் படைகளில் மாற்றுப் பணி அடிப்படையில் நியமிக்கப்படும் ஐபிஎஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையை குறிப்பிட்ட காலத்துக்குள் படிப்படியாக குறைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம்

ஏற்கெனவே தீர்ப்பளித்திருந்தது.

(v) இந்தத் தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரும் மத்திய அரசின் மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், மேற்கண்ட ஒருங்கிணைந்த சட்ட மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்தது.

(vi) இந்த மசோதா, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நீர்த்துப் போக செய்வதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. மேலும், மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. அரசமைப்புச் சட்டத்தின் சிந்தி மொழிபதிப்பை குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்.

(i) உருவாக்கப் சிந்தி மொழி தினத்தை முன்னிட்டு தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த தேவநாகரி மற்றும் பாரசீக எழுத்துருக்களில் பட்டபுதிய பதிப்பைவெளியிட்ட அவர் பேசுகையில், 'பழைமையான மொழிகளில் ஒன்றான சிந்தி, மிகவும் இனிமையான மொழியாகும். வேதாந்த தத்துவமும் சுஃபி சிந்தனையும் இணையும் ஓர் தனித்துவமான சங்கமத்தை சிந்தி மொழியின் இலக்கிய மரபு பிரதிபலிப்தோடு, ஒருமைப்பாடு, அன்பு, சகோதரத்துவம் உள்ளிட்ட உலகளாவிய மதிப்பீடுகளையும் முன்னிறுத்துகிறது.

(ii) அரசமைப்புச் சட்ட சிந்தி மொழிப்பதிப்பை வெளியிடுவது, குறிப்பாக, சுதந்திரத்துக்குப் பிறகு முதன் முறையாக தேவநாகரி எழுத்துருவில் வெளியிடுவது, மொழியியல் அங்கீகார ஊக்கவிப்பில் முக்கிய மைல்கல்லை குறிக்கிறது.

13. ஜோதிபா பூலேவின் 200வது பிறந்தநாள் (ஏப்ரல் 11, 1827) - மாண்புமிகு பிரதமர் அவர்கள், ஓராண்டு கால நாடு தழுவிய கொண்டாட்டங்களின் (ஏப்ரல் 2026 – ஏப்ரல் 2027) முறைப்படியான தொடக்கத்தை அறிவித்துள்ளார்.

14. ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம் குறித்த நீண்டகாலப் பூசலின் பகுப்பாய்வும், 2026-ஆம் ஆண்டில் அதற்கான இறுதிச் சட்டத் தீர்வும்.

(i) குழப்பத்திற்கான காரணங்கள்

- மாநிலப் பிரிவினை (2014): ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) ஆட்சியின் கீழ், ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா எனப் பிரிக்கப்பட்டது.
- தற்காலிகத் தலைநகர் அந்தஸ்து: 2014-ஆம் ஆண்டின் மறுசீரமைப்புச் சட்டம், ஹைதராபாத் நகரம் இரு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகராக 10 ஆண்டுகளுக்குச் செயல்படும் என்றும், அதன் பிறகு ஆந்திரப் பிரதேசம் தனக்கென ஒரு தனித் தலைநகரை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் விதித்தது.
- கொள்கை மாற்றம் (2019): தெலுங்கு தேசம் கட்சி (TDP) அரசு ஆரம்பத்தில் அமராவதியைத் தலைநகராகத் தேர்ந்தெடுத்திருந்த நிலையில், அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி (YSRCP) அரசு, "மூன்று தலைநகரங்கள்"

திட்டத்தை முன்மொழிந்தது: அமராவதி (சட்டமன்றம்), விசாகப்பட்டினம் (நிர்வாகம்) மற்றும் கர்நூல் (நீதித்துறை).

- அரசியல் முரண்பாடுகள்: அமராவதி மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், அக்காலகட்டத்தில் TDP-BJP கூட்டணியில் விரிசல் ஏற்படக் காரணமாக அமைந்தன.

(ii) காலவரிசைப்படியான நிகழ்வுகள்

- 2014: ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது; இச்சட்டத்தின்படி ஹைதராபாத் தெலங்கானா மாநிலத்திற்கு வழங்கப்பட்டாலும், ஆந்திரப் பிரதேசம் அதனை ஒரு பத்தாண்டுகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது.
- 2014-2015: சந்திரபாபு நாயுடு தலைமையிலான அரசு அமராவதியைத் தலைநகராக அறிவித்ததுடன், அப்பகுதியில் பெருமளவிலான நிலங்களைக் கையகப்படுத்தும் (33,000 ஏக்கர்) பணிகளையும் தொடங்கியது.
- 2019: புதிதாகப் பொறுப்பேற்ற ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் அரசு, அமராவதி மேம்பாட்டுப் பணிகளை நிறுத்திவைத்துவிட்டு, மூன்று தலைநகரங்கள் எனும் கோட்பாட்டை அறிமுகப்படுத்தியது.
- மார்ச் 2022: தலைநகரை மாற்றியமைக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்றும், அமராவதியே ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே தலைநகராகத் தொடர வேண்டும் என்றும் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அக்டோபர் 22, 2025: பிரதமர் நரேந்திர மோடி அமராவதி கட்டுமானத் திட்டத்தின் தொடக்க விழாவில் அதிகாரப்பூர்வமாகப் பங்கேற்றார்; இது இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஆதரவு மீண்டும் கிடைத்துள்ளதை உணர்த்தும் விதமாக அமைந்தது.
- மார்ச் 28, 2026: அமராவதியே ஆந்திரப் பிரதேசத்தின் நிரந்தரத் தலைநகராகத் தொடரும் என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான ஒரு முறையான தீர்மானத்தை ஆந்திரப் பிரதேச சட்டமன்றம் நிறைவேற்றியது.
- ஏப்ரல் 2026: 'ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு (திருத்தச்) மசோதா 2026' இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது; இதன் மூலம் தலைநகர் குறித்த நீண்டகாலப் பூசலுக்கு ஒரு முழுமையான சட்டரீதியான முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. (iii) மோதலின் விளைவுகள்
- இந்த விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நீண்டகால சட்டப் போராட்டத்திற்கும், உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவிற்கும் வழிவகுத்தது.
- பல ஆண்டுகளாக, அமராவதியின் "பசுமை நகரம்" (Green City) திட்டம், முறையான சட்ட அங்கீகாரமோ அல்லது போதுமான நிதியுதவியோ இன்றி, ஒரு நிச்சயமற்ற நிலையிலேயே முடங்கிக் கிடந்தது.
- தலைநகரின் அமைவிடம் குறித்த அரசியல் நிலைப்பாடுகள் மாறிக்கொண்டே இருந்ததால், உலகளாவிய நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் இப்பிராந்தியத்தில் முதலீடு செய்யத் தயங்கினர்.
- திட்டத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு நாள் தாமதமும் மாநிலத்தின் நிதி ஆரோக்கியத்தைப் பாதித்தது; இருப்பினும், தற்போது எட்டப்பட்டுள்ள தீர்வு, உலக வங்கியிடமிருந்து ₹13,000 கோடி நிதியுதவித் தொகுப்பைத் திறக்க

வழிவகுத்துள்ளது.

(iv) தீர்வுகள் மற்றும் முடிவுகள்

- நீதித்துறை தலையீடு: அமராவதி கைவிடப்படுவதைத் தடுக்கும் ஒரு முதன்மையான அரணாக உயர் நீதிமன்றத்தின் 2022-ஆம் ஆண்டு தீர்ப்பு அமைந்தது; ஒரு முந்தைய இறையாண்மை சார்ந்த கொள்கை முடிவை அரசாங்கத்தால் மாற்றியமைக்க முடியாது என்று அத்தீர்ப்பு திட்டவட்டமாக அறிவித்தது.
- TDP தலைமையிலான கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்ததன் விளைவாக, முந்தைய அரசாங்கம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான புதிய பிரமாணப் பத்திரத்தை மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.
- YSRCP-யைத் தவிர, ஏறக்குறைய அனைத்து அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் 2026-ஆம் ஆண்டின் திருத்த மசோதாவிற்கு ஆதரவளித்தன; இது ஒரு பரந்த ஜனநாயக ஒருமித்த கருத்தை உருவாக்கியது.

(v) அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்

- அமராவதியை மாநிலத்தின் ஒரே தலைநகராக முறைப்படி அறிவிக்கும் வகையில், 'ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு (திருத்த) மசோதா 2026'-ஐ மத்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தி நிறைவேற்றியது.
- தலைநகர் திட்டத்திற்காகத் தேவைப்படும் 33,000 ஏக்கர் நிலத்தை, எவ்விதமான குறிப்பிடத்தக்க சட்டச் சிக்கல்களுமின்றி நாயுடு தலைமையிலான அரசாங்கம் வெற்றிகரமாகக் கையகப்படுத்தியது.
- உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில், உலக வங்கியிடமிருந்து ₹13,000 கோடி மதிப்பிலான பிரம்மாண்டமான கடனுதவியை அரசாங்கம் பெற்றது.
- 'IBM Quantum Valley' போன்ற திட்டங்களும், பிற சர்வதேச நிறுவனங்களும் தற்போது அமராவதியில் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்கத் தயாராகி வருகின்றன.
- புது தில்லி மற்றும் சண்டிகர் ஆகிய நகரங்களைக் காட்டிலும் மேம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன், அமராவதியை ஒரு "பசுமைத் தலைநகராக" (Green Capital) கட்டமைப்பதை அரசாங்கம் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

15. குறிப்பாக இளைஞர்களிடையே, டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அதிகரித்து வரும் தேவையின் பகுப்பாய்வு.

(i) அதீத பயன்பாட்டிற்கான காரணங்கள்

- இன்று, பெற்றோர்கள் பெரும்பாலும் குழந்தைகளுக்கு உணவூட்டும் போது அவர்களின் கவனத்தைத் திசை திருப்ப அல்லது அவர்களை அமைதியாக வைத்திருக்க ஸ்மார்ட்போன்களை ஒரு கருவியாகக் கொடுக்கிறார்கள், இதன் மூலம் அந்தச் சாதனத்தை ஒரு "டிஜிட்டல் ஆயாவாக" திறம்படப் பயன்படுத்துகிறார்கள்.
- பல்வேறு மொழிகளில் உள்ள காணொளிகள் மூலம் கற்றல் என்ற

போர்வையில் குழந்தைகளுக்கு மொபைல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன, இது விரைவாக பொழுதுபோக்கின் முதன்மை ஆதாரமாக மாறுகிறது.
- பொழுதுபோக்கு (திரைப்படங்கள்/பாடல்கள்) குறிப்பிட்ட நாட்கள் அல்லது நேரங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்த கடந்த காலத்தைப் போலல்லாமல், இணையம் 24 மணி நேரமும் தடையற்ற அணுகலை வழங்குகிறது.
- பொழுதுபோக்கு என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்ததிலிருந்து மாறி, வாழ்க்கையின் மையக் கவனமாக மாறியுள்ளது.
- பன்னாட்டுத் தொழில்நுட்ப நிறுவனங்கள், சமூக நலனைப் புறக்கணித்து, இணையச் சேவைகள் மூலம் ஈட்டப்படும் பெரும் இலாபங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன.

(ii) சமீபத்திய முக்கிய நிகழ்வுகள்

- கர்நாடகாவின் முயற்சி: 16 வயதுக்குட்பட்ட தனிநபர்களிடையே சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த மாநிலம் நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் சித்தராமையா சமீபத்திய பட்ஜெட் உரையில் அறிவித்தார்.
- ஆந்திரப் பிரதேசத்தின் திட்டம்: 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே சமூக ஊடகப் பயன்பாட்டைக் குறைப்பதற்காக ஒரு பிரத்யேக அமைப்பை வடிவமைக்க 90 நாள் திட்டத்தை முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அறிவித்தார்.
- சர்வதேசப் போக்குகள்: ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் டென்மார்க் போன்ற நாடுகள், இளைய தலைமுறையினரை டிஜிட்டல் தீங்குகளிலிருந்து பாதுகாக்க இதேபோன்ற முயற்சிகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளன.

(iii) விளைவுகள்

- தொடர்ச்சியான இணைய இணைப்பு, பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் இருவரிடமும் அபாயகரமான அளவிலான சார்புநிலை மற்றும் அடிமைத்தனத்திற்கு வழிவகுத்துள்ளது.
- நள்ளிரவில் கூட (உதாரணமாக, அதிகாலை 2 மணி) ஸ்மார்ட்போன்களைப் பார்க்கும் பழக்கம், தூக்க முறைகளையும் இயற்கையான வழக்கங்களையும் கடுமையாகச் சீர்குலைத்துள்ளது.
- வரையறுக்கப்பட்ட "வேலை," "ஓய்வு," மற்றும் "தூக்கம்" நேரங்களின் சிதைவு, சமூக மற்றும் தனிப்பட்ட ஒழுக்கத்தில் பொதுவான சரிவுக்கு வழிவகுத்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவு யுகத்தில், குழந்தைகள் வயது வரம்புகளை எளிதில் மீறலாம் அல்லது தங்கள் பெற்றோரின் கணக்குகளைப் பயன்படுத்தலாம், இதனால் எளிய கட்டுப்பாடுகள் பயனற்றதாகிவிடுகின்றன.

(iv) முன்மொழியப்பட்ட தீர்வுகள்

- பெரியவர்களும் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளின் நடத்தையை

வெற்றிகரமாக ஒழுங்குபடுத்துவதற்கு முன்பு, முதலில் தங்கள் சொந்தப் பயன்பாட்டுப் பழக்கங்களில் சுய ஒழுக்கத்தை அவர்களுக்குள் புகுத்த வேண்டும்.

- நேரக் கட்டுப்பாட்டு அணுகல்: பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக சமூக ஊடகங்கள் குறிப்பிட்ட, கட்டாயப்படுத்தப்பட்ட நேரங்களில் மட்டுமே செயல்படும் பழைய தொலைக்காட்சி ஒளிபரப்புகளைப் போன்ற ஒரு மாதிரிக்குத் திரும்புதல்.
- கட்டாய வயது சரிபார்ப்பு: சமூக ஊடகக் கணக்குகளைத் தொடங்குவதற்கு, கல்விச் சான்றிதழ்கள் அல்லது ஆதார் போன்ற ஆவணங்கள் மூலம் வயதுக்கான ஆதாரம் தேவைப்பட வேண்டும்.
- தொழில்நுட்ப நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்கள் என்பதால், இந்த நெருக்கடியை வெறும் உள்ளூர் சட்டங்கள் மூலம் அல்லாமல், சர்வதேச ஒழுங்குமுறைத் தரநிலைகள் மூலம் கையாள வேண்டும்.
- பொது விவாதம்: நீரின் தேவைக்கும், "டிஜிட்டல் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதன்" தேவைக்கும் இடையில் ஒரு சமநிலையைக் கண்டறிவது குறித்து ஒரு தீவிர விவாதத்தை முன்னெடுக்க இந்தியாவின் அறிவுசார் சமூகம் வலியுறுத்தப்பட வேண்டும்.

(v) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- நிதிநிலை அறிக்கை நோக்கம்: 16 வயதுக்குட்பட்டோருக்கான கட்டுப்பாடுகளைச் சட்டமாக்கும் தனது நோக்கத்தை கர்நாடக அரசு நிதிநிலை அறிக்கை மூலம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- வயது அடிப்படையிலான சமூக ஊடகக் கட்டுப்பாடுகளுக்குத் தேவையான குறிப்பிட்ட தொழில்நுட்ப மற்றும் சட்டக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு ஆந்திரப் பிரதேச அரசு தற்போது 90 நாட்கள் அவகாசத்தில் உள்ளது.
- பிராந்திய அளவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், வயது விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய, அனைத்து சமூக ஊடகப் பயனர்களுக்கும் டிஜிட்டல் அடையாளத்தை மத்திய அரசு கட்டாயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது